AHPI மற்றும் GCCMC
இணைந்து வழங்குவது



# கோவிட் 19
# உலகளாவிய பரவலுக்குப்பின்
# **பள்ளிகளைத் திறப்பதற்கான வழிகாட்டுதல்கள்**

# உள்ளடக்கம்


முகவுரை 4

செயற் சுருக்கம் 5

அறிமுகமும் பின்புலமும் 5

பள்ளியைத் திறப்பதற்கு முன்னர் ஆயத்தம் செய்ய வேண்டியவைகளுக்கான அறிவுரைகள் 8

- பள்ளிப் பணிக்குழு நியமனம் / கோவிட்–க்கு எதிரானப் பாதுகாப்புக்குழு 9
- கோவிட் நிலைமைக்கு உரிய பொதுவானத் தேவைகளைச் செய்து உறுதிப்படுத்துதல் 10
- கோவிட்–க்கு என தனியான பிரிவு ஏற்படுத்துதல் 11
- பரிந்து பேசுதலும், தகவல் தெரிவிப்பதும் (Advocacy and Communication) 11
- பணியாளர்களுக்குப் பயிற்சி 12

அன்றாட அலுவல்கள் 13

- பொதுவான நிர்வாகம் 14
- வளாகம் 15
- வகுப்பறைகள் 16
- கழிப்பறைகள் 16
- விளையாட்டுத் திடல்கள் 16
- உணவகங்கள் 17
- ஆய்வகங்கள் 18
- மதிய உணவு உள்ளிட்ட பள்ளியில் வழங்கும் உணவுகள் 18
- பொதுவிடங்கள் 18
- நூலகம் 19
- போக்குவரத்து வசதிகள் 19

# உள்ளடக்கம்


**ஈடுபடுபவர்கட்கான பரிந்துரைகள்** 20

- பெற்றோர்கள் 21
- மாணவர்கள் 22
- பள்ளி நிர்வாகிகள் 22
- ஆசிரியர்கள் 23
- ஆசிரியரல்லாத பிற ஊழியர்கள் (ஓட்டுநர், துப்புரவாளர், காவலாளிகள் முதலியோர்) 24
- வருகை புரிவோர் 24

**மனநலம் பற்றிய சிக்கல்களைக் கையாளுதல்** 25

**உறைவிடப் பள்ளிகளுக்கான மேலும் தேவையான பரிந்துரைகள்** 26

**சிறப்புக்கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான பள்ளிகள்** 27

**இணைப்புகள்** 28

- பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர் மற்றும் இதர ஊழியர்களுக்கான சரிபார்ப்புப் பட்டியல் 28
- மாணவர்களுக்கான சரிபார்ப்புப் பட்டியல் 29
- பெற்றோர்கள் மற்றும் சமுதாய உறுப்பினர்கட்கான சரிபார்ப்புப் பட்டியல் 30

**நிழிணர் குழு** 31

**மேற்கோள்கள்** 34

# முகவுரை

நாடு முழுவதும் கோவிட் 19 தொற்று கடந்த 18 மாதங்களாக கட்டுக்குள் வராமல், பலவிதத் துறைகளும் பாதிக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரம் மிகவும் பின்தங்கியுள்ளது. இதில் கல்வித் துறையும் அடங்கும். நாடு முழுவதும் கட்டாயமாக பள்ளிகள் மூடப்பட்டோ, அல்லது மெய்நிகர் கல்வி கற்றல் (Virtual Learning) என்ற நிலைக்கோ கொண்டுசென்றுவிட்டது.

பள்ளிப் பிள்ளைகள் விட்டு விட்டுப் படிக்கவோ அல்லது தனிமையில் கற்கவோ வேண்டியிருந்தது. இவைகளால் ஏற்பட்ட இதுகாறும் சந்தித்திராத மனஉளைச்சலுக்கு ஆளாகியதுடன், ஊட்டச் சத்துக் குறைபாடுள்ளவர்களாகவும் (அதுவும் குறிப்பாக உணவுக்குப் பள்ளியினைச் சார்ந்திருந்தவர்கள்) ஆனார்கள். இவைகள் யாவும் பள்ளிப்பிள்ளைகளின் மனநலம் மற்றும் உடல்நலம் ஆகியவற்றைப் பாதித்தன.

எனவே பள்ளிகளைப் பாதுகாப்பான முறையில் திறந்து நடத்துவது என்பது இன்றியமையாத தேவையாகிவிட்டது.

நமது நாட்டின் பள்ளிப் பிள்ளைகளின் மனம் மற்றும் உடல் நலனைக் காக்கவும் அதே நேரத்தில் அவர்களுக்கு ஓரளவுக்கு இயல்பான பள்ளி வாழ்க்கை அமையுமாறும் இருப்பதற்காக, எதார்த்தமான, நடைமுறைப்படுத்தக் கூடிய மற்றும் தொடர்ந்து நிலைத்திருக்கக் கூடிய பலவித நடவடிக்கைகளை எடுத்து இயம்புவதற்காக,

நாடு முழுதும் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் உள்ள கல்வியாளர்கள் மருத்துவத்துறையினர் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் அடங்கிய நிபுணர்கள் குழுவாக ஒன்றிணைந்தனர். இக்குழுவால் எடுத்துச் சொல்லப்பட்ட இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பெற்றோர் கல்வியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்கு ஓரளவு மனதில் நம்பிக்கை ஊட்டுவதற்கு உதவுவதுடன் பள்ளிக்குத் திரும்புவதற்கு மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும்.

இந்தப் பரிந்துரைகளை முடிந்தவரைப் பள்ளிகள் பின்பற்றுவதுடன், அதனால் கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்குத் திரும்புவதைத் தொடங்குவதற்கு உரிய பாதுகாப்பினை மாணவர்களுக்கும் பள்ளி ஊழியர்கட்கும் தருவதற்கான வலிமையை பள்ளிகளுக்குக் கொடுக்கும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

**டாக்டர். அலெக்சாண்டர் தாமஸ்**
தலைவர்
Association of Healthcare Providers - India

**டாக்டர். ஷகிலா ஷம்சு**
முன்னாள் பணி அலுவலர்
புதிய கல்விக் கொள்கை
கல்வித்துறை அமைச்சகம், இந்திய அரசு

# செயற் சுருக்கம்

இந்தியாவின் சில பகுதிகள் முழுவதிலும் நீண்ட காலமாக பள்ளிகள் முடியிருந்தன. எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் மெய்நிகர் முறையில் கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டது. இதற்குப் பின்னர் பள்ளி வளாகங்கள் தற்போது திறக்கப்படுகின்றன.

பாதுகாப்பான முறையில் கல்வி கற்பதற்கான பள்ளிச் சூழ்நிலையினையும் நாட்டின் பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் உருவாக்குவதற்கான பரிந்துரைகளை எடுத்துக் கூறுவதற்காக கல்வியாளர்கள் மருத்துவத் துறையாளர்கள் மற்றும் பெற்றோர் அடங்கிய ஒரு குழுவாக இணைந்தனர். அவர்களின் பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வளாகத்திற்குள் மாணவர்கள் வரத் தொடங்குவதற்கும், பள்ளிகளைத் திறப்பதற்கான ஆயத்தங்களையும் பள்ளிகள் தொடங்குகின்றன. பள்ளிக்கான கோவிட் பாதுகாப்பு செயற்குழு /காரியக் குழு (Task Force/Committee) ஒன்று கோவிட் பாதுகாப்பு நடைமுறைகளை பரிந்துரைப்பதுடன், அவ்வப்போது அதை மேம்படுத்தவும் (review) வேண்டும். பள்ளியினைத் திறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே வகுப்பறை மற்றும் பள்ளியின் மற்ற பகுதிகளில் கோவிட் பாதுகாப்பிற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தி இருக்கவேண்டும். அனைத்து ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மை அதிகாரிகள் (Administrators) பேருந்து ஓட்டுநர் உள்ளிட்ட இதர பள்ளி ஊழியர்கள் ஆகிய அனைவரும் தடுப்பூசிகள் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் கோவிட் பாதுகாப்புக்குரிய வழிமுறைகளில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். சமூக உளவியல் (Psycho social) நடைமுறைகளை மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தருவதற்கான பயிற்சியினை ஆசிரியர்கள் பெற்றிருக்கவேண்டும். பள்ளியில் உள்ள பாதுகாப்பு நடைமுறைகள் (கோவிட்) தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய உண்மையான நிலவரங்களை பள்ளியானது பெற்றோருக்குத் தெரிவித்து, அவர்களது குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்கு முன்னர் பெற்றோர்களிடமிருந்து ஒப்புதல் வாங்கியிருக்கவேண்டும்.

வளாக நிர்வாகம், ஒப்பனை அறை, கழிப்பறைகள் ஆகியவற்றின் பயன்பாட்டுக்கான நடைமுறைகள், விளையாட்டுத் திடல், ஆய்வகங்கள், பொதுவிடங்கள், உணவகங்கள் ஆகிய இடங்களில் பின்பற்றவேண்டிய நெறிமுறைகள், மதிய உணவு வழங்கல் முறை மற்றும் போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட பள்ளி வாழ்க்கையின் பல அம்சங்களுக்கான அன்றாடம் மேற்கொள்ளவேண்டிய பரிந்துரைகள் விரிவாக வரையப்பட்டுள்ளன. பாதுகாப்பாகப் பள்ளிகளைத் திறப்பதில் ஈடுபடக்கூடிய அனைவருக்குமான பரிந்துரைகள் கூறப்பட்டுள்ளன. தூய்மையான பழக்கவழக்கங்களையும் அவர்களுடைய உடல் நலத்தை பற்றியும் பெற்றோர் குழந்தைகட்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். எல்லா நேரமும் மாணவர்கள் கோவிட்டுக்கான உரிய நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் இதர பள்ளி ஊழியர்கள் ஆகியோர் முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டிருப்பதுடன் கோவிட் நெறிமுறைகளைப் பின்பற்றவேண்டும். மற்றவர் யாரும் பள்ளி வளாகத்திற்குள் வருவதைத் தவிர்க்க வேண்டும். இன்றியமையாது அவ்வாறு வர நேரிடின் கோவிட்–க்கான உரிய நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

பல்வேறு விதமான பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்களுக்களால், பாதிக்கப்படக் கூடிய வாய்ப்புள்ள இளஞ் சிறாருக்கத் (minor) தேவையான சமூக உளவியல் ரீதியாக உதவக் கூடிய மனநலத்திற்கான பரிந்துரைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

உறைவிடப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் இயைந்து வாழ்வதற்கு (Cohabiting) ஆன பரிந்துரைகளும் மேலும் கொடுக்கப்பட்டுள்ளன. சிறப்புக் கவனம் செலுத்தவேண்டிய மாற்றுத் திறனாளிக் குழந்தைகட்கான சிறப்பு பரிந்துரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தின் இறுதியில் குறிப்பிட்ட நெறிமுறைகளைப் பெறுவதற்கான தொடர்பு (Link) பள்ளி ஊழியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் மக்களுக்குத் தேவையான (நிலையான இயக்க ஆவணம்) SOPs சரிபார்ப்பு பட்டியல் (Check list) ஆகியவைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

# முன்னுரையும் பின்புலமும்



## கோவிட் 19 வைரஸ் தொற்று ஆனது கொஞ்சம் கொஞ்சமாக இந்தியா முழுதும் பரவியுள்ளது. உலகளாவிய இந்தத் தொற்று கல்வித்துறையினை மிகவும் பாதித்துள்ளது. UNICEF – ன்படி, இந்தியாவில் 2020ல் ஏற்பட்ட பாதிப்பினால் 1.5 மில்லியன் பள்ளிகள் மூடப்பட்டன. அதனால் 247 மில்லியன் தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (UNICEF, 2021)

கோவிட் 19 ஆல் உலகம் முழுதும் பள்ளிகள் மூடப்பட்டதால் ஏற்பட்ட தீங்கான விளைவுகள் பட்டியலில் கற்றலில் குறுக்கீடு என்பதற்கு யுனெஸ்கோ முதலிடம் கொடுத்துள்ளது. மாணவர்களின் மனநலம் மற்றும் உடல்நலம் ஆகிய இரண்டும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. (Hoffman and Miller, 2020). இளஞ்சிறார் உடற்பருமன் (Childhood obesity), கிட்டப்பார்வை (Myopia) மற்றும் சில மனநல பாதிப்புகள் ஆகியவைகளின் நிகழ்விகிதம் (incidence) பள்ளிகள் மூடப்பட்ட காலக்கட்டத்தில் அதிகரித்துள்ளன. (Jenssen et al, 2021; Wang et al 2020).

பள்ளிகளில் உணவு வழங்கும் பெரிய திட்டங்களில் ஒன்றான மதிய உணவு வழங்கும் திட்டமானது 115.9 மில்லியன் இந்திய பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கிறது. பள்ளிகளில் சேர்பவர்களின் எண்ணிக்கையும், பள்ளிக்கு வருபவர்கள் எண்ணிக்கையும் அதிகரிப்பதற்கு இந்தத் திட்டம் மறைமுகமாக உதவியது. உலகளாவிய கோவிட் தொற்றால் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகள் மூடப்பட்டதால், பள்ளி செல்லும் குழந்தைகட்கு ஊட்டச்சத்து உணவு கிடைப்பது அப்பொழுது மிகவும் குறைந்தது.

பள்ளிகள் மூடிய நிகழ்வு, மாணவர்களின் இயல்பான வாழ்க்கையைக் குலைத்தது. (மற்ற மாணவர்களுடன் பழக வாய்ப்பு இல்லாமல்) தனிமையாக விடப்பட்டதால் ஏற்பட்ட மன உளைச்சல் அதிகரித்தன. உடல் ரீதியான, அறிவு பூர்வமான மற்றும் சமுதாய நிகழ்வுகளில் பங்கேற்க முடியாதுபோனதால் இந்த மன உளைச்சல் மேலும் கூடியது.

வெளியில் சென்று விளையாடுவது, நண்பர்களைச் சந்திக்கச் செல்வது அல்லது வகுப்பறையில் மற்றவர்களுடன் சேர்ந்திருப்பது ஆகியவை இயலாமல் போனதால் மாணவர்களின் ஊக்கம் (motivation) குறைந்தது.

பழக்கமில்லாத புதிய ஊடகத்தின் மூலம் கல்வி கற்ற நிகழ்வு, நண்பர்களுடன் சேர்ந்து இருப்பது இல்லாமல் போனது, வீட்டிலேயே நீண்ட நேரம் முடங்கிக் கிடந்தது ஆகியவை குழந்தைகளின் உளவியல் (Psychological) ரீதியான மற்றும் உடல்ரீதியான (Physical wellbeing) நலத்தில் நீண்டகால தீய விளைவுகளை ஏற்படுத்தின. பள்ளிகளைத் திறக்கத் திட்டமிடும்பொழுது மேற்சொன்ன இந்த விளைவுகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பள்ளிக்கு மாணவர்கள் வருவதால் அவர்களுக்கு கோவிட் 19 நோய்த் தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்பு மற்றவர்களைக் காட்டிலும் கூடுமென்று எண்ணுவது ஏற்புடையதல்ல என்று எடுத்துக்கூறுகின்ற குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரிடையே (adolescents) நடத்தப்பட்ட ஆய்வறிக்கைகள் சில உள்ளன. Leidman et al 2020 : Ismail et al 2021, Gandini et al 2021, Mossong et al 2020).

தடுப்பூசி போடும் திட்டங்கள் அனைத்திலும் வயது வந்தவர்கட்கு எத்தனை பேருக்கு ஊசி போட முடியுமோ அத்தனை பேருக்குப் போடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவே தவிர நமது நாட்டில் குழந்தைகட்குப் போடுவதற்கு எந்த தடுப்பூசியும் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை.

**இந்த ஒரு சூழ்நிலையில் நமது குழந்தைகளைச் சுற்றியிருக்கும் அனைவரும் முழுமையாக தடுப்பூசிபோட்டவர்களாக இருப்பதே சிறந்த வழியாகும்.**

பெரும்பாலான மாநிலங்கள் பள்ளிகளைத் திறக்கத் தொடங்கிவிட்டன. நேரடி வகுப்புக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டு வருகின்றது.

மாணவர்களும் ஊழியர்களும் பள்ளி வளாகத்திற்குள் இருக்கும்பொழுது பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை உணர்வினை மாணவர் மற்றும் பெற்றோர் ஆகியோரிடையே ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை பள்ளி நிர்வாகிகள் எடுக்கவேண்டிய தேவை உள்ளது.

# திறப்பதற்கு முன்னர் பள்ளியை ஆயத்தப்படுத்துவதற்குரிய பரிந்துரைகள்



A security guard and a woman wearing masks at the entrance of a school, waiting for the students to arrive.

ஒவ்வொரு பள்ளியும் வெவ்வேறாக இருக்கும். இந்த ஆவணம் பாதுகாப்பாக பள்ளி இயங்குவதற்கான பொதுவான பரிந்துரைகளைத்தான் எடுத்தியம்புகின்றது. எனவே, ஒவ்வொரு பள்ளியும் அதற்குத் தேவையான உரிய வழிகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறு ஒவ்வொரு பள்ளிக்கும் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளியில் எந்த வகுப்புகளை முதலில் தொடங்குவது என்பது பற்றி முடிவெடுக்கும்பொழுது மழலைப் பள்ளி வகுப்புகள் மற்றும் ஆரம்பப் பள்ளி வகுப்புகள் (Pre-School and Primary Classes) ஆகியவைகளைத் திறப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இதன் மூலம் பரிந்துரைக்கப்படுகின்றது. அதாவது நடுநிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி (middle and high schools) மாணவர்களைக் காட்டிலும் நோய் பரவும் விரைவின் விகிதம் (transmission rate) இளைய குழந்தைகட்குக் குறைவு என்பதால் முதலில் இளையவர்களைப் பள்ளிக்கு வரச் செய்து அவர்கள் கல்வி கற்பதையும், அறிவை வளர்த்துக் கொள்வதையும் (learning and development) மீண்டும் தொடர்வதற்கு வழிவகுக்கலாம்.

எனவே பள்ளிகளில் உள்ள வகுப்புகளை படிப்படியாகத் திறக்கலாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

## பள்ளிக்கான கோவிட் பாதுகாப்பு செயற்குழு / காரியக்குழு அமைத்தல்

- மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பினைக் கண்காணிப்பதற்கு (Monitoring) என பள்ளி கோவிட் பாதுகாப்பு செயற்குழு / காரியக்குழு ஒன்றினை ஒவ்வொரு பள்ளியும் அமைத்திடல் வேண்டும்.
- அந்தக் குழுவின் உறுப்பினர்களாக பின்வருபவர்கள் இருக்க வேண்டும்.
  - » முதல்வர் / தலைமை ஆசிரியர்
  - » மூத்த ஆசிரியர் – முடிந்தால் உயிரியல் ஆசிரியர்
  - » ஒவ்வொரு வகுப்பிற்கான வகுப்பாசிரியர்கள்
  - » வகுப்புத் தலைவன் / மாணவர் அணி பிரதிநிதி
  - » பெற்றோரின் பிரதிநிதி ஒருவர்
  - » ஆசிரியரல்லாத பள்ளிப் பணியாளர் ஒருவர்
  - » மருத்துவர்
  - » நகர / ஊராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர்
- அந்தக் குழுவிற்கான வேலைகள் வரையறுக்கப்படவேண்டும்.
- பின்பற்றக் கூடிய பாதுகாப்பு முறைகளை பள்ளியானது அவ்வப்போது மேம்படுத்தல் (reviewing) வேண்டும்.
- பள்ளி இருக்கும் இடத்தில் மற்றும் பள்ளியில் நிலவும் கோவிட் சூழ்நிலைக்கேற்ப பாதுகாப்பு நெறிமுறைகளைப் பரிந்துரைத்தல்.
- பரிந்துரைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக முறையாகவும் தேவைப்படும் நேரங்களிலும் இந்தக் குழு கூட்டப்படவேண்டும்.

## கோவிட் நிலவரத்திற்கு ஏற்ற பொதுவான தேவைகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துதல்

- பிள்ளைகள் பள்ளிக்கு வருவதற்குச் சற்று முன்னர் வகுப்பறை, மாடிப்படிகள், தாழ்வாரங்கள், கழிப்பறைகள், ஆய்வகங்கள், ஊழியர் உட்காரும் அறைகள், பொதுவான அறைகள், மற்றும் விளையாட்டுத் திடல்கள் ஆகியவை அடங்கிய பள்ளியின் அனைத்து இடங்களும் அங்கீகரிக்கப்பட்ட கிருமி நாசினி (disinfectant) கொண்டு தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.
- அனைத்து விதமான பள்ளி உபகரணங்களும் எல்லா நேரங்களிலும் தூய்மையாக வைத்திருக்கப்படல் வேண்டும்.
- உரிய இடங்களில் கிருமிநாசினி (hand sanitaiser) வைக்கப்படவேண்டும்.
- வகுப்பறை மற்றும் மாணவரும் ஊழியரும் பயன்படுத்தும் இடங்களைத் தூய்மைப்படுத்துவதற்கான அன்றாடத் திட்டம் இருக்கவேண்டும்.
- நுழைவாயிலில் உடல் வெப்பம் பரிசோதிக்கப்படவேண்டும்.
- ஒரு வகுப்பறைக்குள் அதன் அளவை கணக்கில் கொண்டு எத்தனை பேர் உட்காரலாம் என்பதைக் கணக்கிட வேண்டும். எந்த நேரத்திலும் அந்த வகுப்பறைக்குள் அமர்ந்திருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்ட இந்த எண்ணிக்கைக்கு அதிகமாகப் போகாமலும் சமுதாய இடைவெளி உறுதிப்படுத்துமாறும் பார்த்துக் கொள்ளவேண்டும்.
- அவரவர்க்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கையில்தான் மாணவர்கள் தொடர்ந்து அமரவேண்டும்.
- ஒருவருக்கொருவர் விலகி இருப்பதற்கு வழி செய்யும் வகையில் பெஞ்சுகளிலும் நாற்காலிகளிலும் அடையாளங்கள் போடப்பட்டிருக்கவேண்டும்.
- குழந்தைகள், குறிப்பிட்ட எப்பொழுதுமுள்ள நெருங்கிய நண்பர், உறவினர் வட்டத்துக்குள்ளேயே (Social bubble) எப்பொழுதும் இருக்கவேண்டும் என்றும் இவர் தவிர மற்றவர்களுடன் சேர்ந்திருப்பதைத் தவிர்க்கவேண்டும் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்திக் கொண்டேயிருக்கவேண்டும்.
- மாணவர்களை அழைத்து வருபவர் (transporting) உள்ளிட்ட அனைத்துப் பள்ளி ஊழியர்களும் தடுப்பூசி போட்டிருக்கவேண்டும்.
- பயன்படுத்தப்படும் வகுப்பறைக்குள் காற்றோட்டம் நன்றாக இருக்குமாறு செய்வதுடன், முடிந்தால் ஜன்னல்களைப் பெரிதுபடுத்தியும் திறந்தும் வைக்கலாம்.
- வகுப்பறையில் வெப்பக் கட்டுப்பாடு (air conditioning) வசதியிருப்பதைத் தவிர்க்கவேண்டும். அப்படி குளிரூட்டல் தேவைப்பட்டால் HEPA வடிகட்டிகள் பயன்படுத்தப்படவேண்டும் அல்லது மீண்டு வரும் காற்றின் (Recirculating air) அளவு விகிதமானது குறைவான விழுக்காட்டில் இருக்குமாறு வசதிகள் மாற்றப்படல்வேண்டும்.
- வானிலையையும் மற்ற சிக்கல்களையும் கவனத்தில் கொண்டு, முடிந்தால் திறந்த வெளியில் வகுப்புகளை நடத்தலாம்.
- எங்கெங்கு முடியுமோ அந்த வகுப்பறைகளில் காற்று வெளியேற்றும் மின்விசிறி (Exhaust fan) பொருத்தப்படவேண்டும்.

## கோவிட் தனிமைப் பிரிவு

- இவருக்குக் கோவிட் இருக்குமோ என்று ஐயப்படக்கூடியவர்களுக்கென தனிமைப் பகுதி ஒன்றினை பள்ளி ஏற்பாடு செய்யவேண்டும்.
- இந்தத் தனிமை அறையில் உள்ள அனைவரும் உரிய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- அடிப்படை மருத்துவ சிகிச்சையினைக் கொடுப்பதற்கான வசதிகள் அனைத்தும் அந்தத் தனிமைப்படுத்தும் பகுதியில் கிடைக்கவேண்டும்.
- அவசரமெனில் தொடர்பு கொள்ள வேண்டியவரின் தொடர்பு எண்கள் குறித்து அறையில் சுட்டிக்காட்டியிருக்கப்பட வேண்டும். (Displayed)
- இன்றியமையாத மருந்துகள் தேவையான அளவில் அந்தத் தனிமை அறையில் வைத்திருக்க வேண்டும்.
- இவர்களை குறிப்பிட்ட இடங்களுக்கு அவசரமாக எடுத்துச் செல்வதற்கு ஓட்டுநருடன் கூடிய பள்ளி வாகனம் ஒன்று கிடைக்கக்கூடிய வசதி, முடிந்தால் பெற்றிருக்க வேண்டும்.
- மருத்துவர் மற்றும் ஊழியருக்கான கோவிட் சிகிச்சைக்கான விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பள்ளியால் நிர்வகிக்கப்படவேண்டும்.
- குழந்தைகட்கு கோவிட் இருப்பதாக ஐயம் ஏற்பட்டால் அவர்களுடைய பெற்றோருக்கு உடனே இதுபற்றித் தகவல் தெரிவிக்கவேண்டும்.

## பரிந்துரைப்பதும் (Advocacy) மற்றும் தகவல் தெரிவிப்பதும்

- பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்குச் செல்லச் சொல்லி ஊக்குவிக்க வேண்டும். பள்ளி நிர்வாகிகள், பெற்றோர்க்கான கூட்டங்களைக் கூட்டவேண்டும். அவ்வாறு, கூட்டி பள்ளியில் ஏற்படுத்தியிருக்கும் பலவித பாதுகாப்பு வசதிகளைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கவேண்டும்.
- மாணவர்களைப் பள்ளிக்கு வரச் சொல்வதற்கு முன்னர், அவர்களின் பெற்றோரிடம், பள்ளி நிர்வாகிகள் ஒப்புதல் கடிதம் (consent) பெறவேண்டும்.
- கோவிட் தொடர்புடைய (அண்மைக்கால அறிவுரைகள் உள்ளிட்ட) செய்திகளை ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியவர்களுக்கு பள்ளி நிர்வாகம் தெரிவித்து, பள்ளி வளாகத்திற்குள், சம்பந்தப்பட்ட அனைவரும் கோவிட்க்கு உரிய நடவடிக்கைகளை பின்பற்றுவதை உறுதிப்படுத்தவேண்டும். இதை, மின்னணு ஊடகம் (Digital means), அறிவிப்புகள் (Posters) மற்றும் பொது அறிவிப்புகள் போன்ற பல வழிகள் மூலம செய்யலாம்.

## பணியாளர்களுக்கான பயிற்சி

- மருத்துவத் துறையினைச் சேர்ந்தவர்களைக் கொண்டு கோவிட் விழிப்புணர்வு பற்றிய நிகழ்ச்சிகளை முறையாக நடத்தவேண்டும். இந்நிகழ்ச்சிகள் மூலம், முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியினைக் கடைப்பிடித்தல், தூய்மையாக இருத்தல், இருமல் வரும் பொழுது என்ன செய்ய வேண்டும் மற்றும் கோவிட் எதிரான பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கைகள் என்ன ஆகியவை பற்றிய கோவிட் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய விபரங்களை அனைத்து ஊழியர்க்கும் அறிவுறுத்தவேண்டும்.
- கிருமித் தொற்று கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுப்பதுடன் மாசுபடுவதைத் தடுக்கும் வகையிலும் கைகழுவும் முறை (நீர் கிடைத்தல், கழிவுப் பொருள்கள் அகற்றுதல், தூய்மை போற்றுதல் (water access, sanitation and hygiene) பின்பற்றப்படவேண்டும்.
- வன்முறை, மனஅழுத்தம் மற்றும் பதட்டம் (violence, depression & anxiety) ஆகியவைகளுக்குத் தீர்வு தரும் வகையில் உளவியல் மற்றும் சமுதாய ரீதியாக, மாணவர்களுக்கு உதவக் கூடிய வகையில் பள்ளிப் பணியாளர்க்கு பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்.
- பள்ளியின் கோவிட் பணிச் செயற்குழு இது போன்ற பயிற்சிகள் தேவையா என்பதைத் தீர்மானித்து அதற்கான தங்களுடைய கருத்துக்களைத் (feedbacks) தெரிவிக்கவேண்டும்.



A meeting on COVID-19 held in a school near Beawar, Rajasthan.

# அன்றாட மேலாண்மை



A sanitary worker in a protective suit, conducting disinfection of a school during COVID-19.

## பொதுவான மேலாண்மை

- மூன்று அடுக்குடைய முகத் திரையினை, (பள்ளியில்) இருக்கும் நேரம் முழுதும் அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் கட்டாயமாக அணிவதுடன், தேவைப்பட்டால் அவ்வப்போது மாற்றவும் செய்யவேண்டும்.
- பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பள்ளிக்கு வருகை தரக் கூடியவர்கள் அனைவருக்கும் உடல் வெப்பநிலை பரிசோதனை அன்றாடம் பார்க்க வேண்டும். அத்துடன் முன்னர் உள்ள கடந்த 24 மணி நேரத்தில் காய்ச்சல் அல்லது காய்ச்சல் போன்ற உணர்வு (feeling feverish) ஏற்பட்டதா என்பதைக் கேட்டு, அவ்வாறான காய்ச்சல் இல்லை என்பதை உறுதி செய்த பின்னரே கட்டிடத்திற்குள் அனுமதிக்கவேண்டும்.
- வகுப்பு ஆசிரியர் மற்றும் மாணவர்கட்கு தேவையான அளவு கூடுதல் எண்ணிக்கையில் முகத்திரை கிடைக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும்.
- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைக்கு முகத்திரை அணிய அதற்கு உதவி செய்வதுடன், அதை அணிவதால், குழந்தைக்கு மூச்சு விடுவதில் ஏதேனும் சிரமம் ஏற்படுகின்றதா என்று அவ்வப்போது கவனிக்கவேண்டும்.
- முக்கியமான இடங்களில் கோவிட்–க்குப் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிகளைக் குறித்து எழுதி (signage) வைத்திருக்கவேண்டும்.
- மடிக்கணினி, செல்பேசிகள் மற்றும் ஒருவரின் சொந்தப் பொருள்கள் ஆகியவற்றை இன்னொருவர் பயன்படுத்துவது தவிர்க்கப்படல்வேண்டும்.
- எல்லா பெஞ்சுகள், இருக்கைப் பகுதிகள், பள்ளி வாகனங்கள், ஆம்புலன்ஸ் வாகனம் ஆகியவை அனைத்தும், பயன்படுத்தக் கூடிய பகுதி, பயன்படுத்தக் கூடாத பகுதி என்று பிரித்துத் தனியாக அடையாளம் காட்டப்பட்டிருக்கவேண்டும்.
- குழுக்களாக இருத்தல் (gatherings) மற்றும் கூட்டங்கள் (assembling) போடுதல் ஆகியவை பள்ளிக்குள் இருக்கக் கூடாது.
- பள்ளியிலுள்ள அனைத்து பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு கோவிட் 19 பற்றியும் மற்றும் கோவிடிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்குரிய முறைகளான அடிக்கடி கைகள் தூய்மைப்படுத்துவது, சுத்தமாக சுவாசித்தல், முகத்திரைப் பயன்பாடு, கோவிட் 19க்கான அறிகுறிகள், அப்படி யாருக்காவது நோய் வந்தால் என்ன நடவடிக்கை எடுப்பது ஆகியவைகள் அழுத்தம் கொடுத்து சொல்லிக் கொடுக்கப்படல் வேண்டும்.
- பள்ளி விட்டு வெளியே செல்லும்போது மாணவர்கள் கூட்டமாக சேர்ந்து செல்வதும் (gathering) குழுக்களாகச் செல்வதும் (socialising) தவிர்க்கப்பட வேண்டும்.
- பள்ளி வாகனம் மற்றும் பொதுத் துறை வாகனங்கள் ஆகியவற்றைப் பள்ளிக்கு வந்து செல்வதற்குப் பயன்படுத்தும் பொழுது மாணவர்கள் பின்பற்ற வேண்டிய, தும்மல் இருமல் செய்தலுக்கான விதிமுறைகள் (respiratory hygiene) கைகளைத் தூய்மையாக வைத்திருத்தல், ஒருவருக்கொருவர் தூரமாக இருந்துகொள்ளுதல் (social distancing) ஆகியவற்றைப் பின்பற்றுதல் போன்ற கோவிட் 19க்கான பாதுகாப்பு முறைகள் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும்.
- அவ்வப்போது நிலவும், அரசின் வழிகாட்டுதலின்படி கோவிட் நோய் இருக்கிறதா என்பதைப் பரிசோதிக்கும் திட்டம் ஒன்று பள்ளியில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.
- எழுது பொருட்கள், கைக் கடிகாரம், செல்பேசிகள் போன்ற சொந்தப் பொருள்கள் கொண்டு வருவதைக் குறைத்துக் கொள்ளவேண்டும். இவைகளை ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக் கொள்ளும் பழக்கத்தைக் கைவிடவேண்டும். அதேபோன்று ஒன்றாக இருந்து சாப்பிடுவதையும் உணவு அல்லது குடிநீரை பகிர்ந்து கொள்ளுதலையும் கைவிடச் சொல்ல வேண்டும்.

## வளாகம்

- வேலை நடக்கும் இடங்கள், மற்றும் அனைவரும் பொதுவாகப் பயன்படுத்தும் இடங்கள் ஆகியவற்றை முழுமையாகவும் (thorough), ஆழ்ந்தும் (deep cleaning) சுத்தப்படுத்த வேண்டும்.
- மாணவர்கள் அடிக்கடி பயன்படுத்தும் பகுதிகள் தூய்மையாக இருக்கின்றனவா என்று கண்காணிப்புக் குழு ஒன்று சென்று பார்த்துக் கண்காணிக்கவேண்டும்.
- பள்ளிக்குச் செல்லும் முன் மற்றும் திரும்பிய பின், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் கழிப்பறைக்குச் சென்று வந்தபின் மற்றும் தேவைப்படும் பொழுதெல்லாம் அனைத்து மாணவர்களும் தங்கள் கைகளைக் கழுவி (sanitise) சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.
- முக்கியமான பகுதிகள், அரங்குகள், தாழ்வாரங்கள் ஆகிய இடங்களுக்கு ஆசிரியர்கள் அல்லது பள்ளிப் பணியாளர்கள் சென்று அங்கிருப்பவர்களிடையே சமூக தனி மனித இடைவெளி விடுதல் (Social distancing) பின்பற்றப்படுகிறதா என்பதைப் பார்க்கவேண்டும்.
- முடிந்தால் வெவ்வேறு வகுப்பு மாணவர்களும் பள்ளி உள்ளே நுழையவும் அதிலிருந்து வெளியே செல்லவும் கூடிய நேரத்தினைத் தள்ளித் தள்ளி வைத்தல் (Staggered timings)
- வகுப்பிற்கான நேரக் குறைப்பு மற்றும் வெவ்வேறு வகுப்புகள் நடக்கும் நேரம் தள்ளி வைத்தல் ஆகியவையும் கூட்டம் சேர்தலைத் தவிர்க்கும் வழியாகும்.
- அவ்வப்போது வேண்டிய நடவடிக்கை பற்றி அறிவிப்புச் செய்தல், ஸ்டான்டிகள் (Standees) வைத்தல், அறிவிப்புகள் (posters) செய்திகள் எழுதி வைத்தல் ஆகியவை செய்வதால் கோவிட் பற்றிய செய்திகளைப் பரப்பலாம்.
- முகத்திரை கொண்டுவர மறந்த மாணவர்களுக்கு பள்ளியே கொடுத்து உதவவேண்டும்.
- வகுப்பறைகள், விளையாட்டுத் திடல்கள், உணவகங்கள், ஆய்வகங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவற்றுக்குள் மட்டும்தான் மாணவர்கள் அனுமதிக்கப்படல்வேண்டும். அதுகூட கோவிட் நடைமுறைகளைப் (protocols) பின்பற்றினால்தான் அனுமதிக்கப்படல் வேண்டும்.
- இடைவேளைகளின் போது ஒரு ஆசிரியர் வகுப்பறையில் கட்டாயமாக இருக்கவேண்டும். மாணவர்கள் அவரவர் வகுப்பறையிலேயே இருந்து கொண்டு மதிய உணவினைச் சாப்பிடுவதை முடித்துக் கொள்ளவேண்டும். எந்தக் குழந்தையும் ஆசிரியரின் அனுமதியின்றி வெளிச் செல்ல அனுமதிக்கப்படல் கூடாது.
- அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் ஒரே நேரத்தில் பொதுவான இடைவேளை இருக்கக் கூடாது. இடைவேளை விடும் நேரத்தையும் வகுப்புக்கு வகுப்பு முடிந்தால் தள்ளி வைக்கவேண்டும்.

## வகுப்பறைகள்

- மாணவர்க்கான இரு மேசைகளுக்கிடையே உள்ள தூரம் ஆறு அடி இருக்குமாறு போடுவதுடன் அடையாளமும் எழுதி இருக்கும்படியான புதிய முறையில் மாணவர்களின் இருக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.
- பள்ளிகளின் காலை அணிவகுப்பினை (School assemblies) அவரவர்களின் வகுப்பறையிலேயே நடத்திக் கொள்ளலாம்.
- வருகை மற்றும் வகுப்பை விட்டு வெளிச் செல்வதற்கான நேரத்தை வகுப்புகளுக்கிடையே நேரம் விட்டு விட்டு (Staggered) தள்ளி வைக்கவேண்டும்.
- ஒவ்வொரு மாணவர்க்கும் குறிப்பிட்ட இருக்கையை என்றும் நிலையாக இருக்குமாறு ஏற்பாடு செய்வதுடன், ஒருவருக்கொருவர் இடத்தை மாற்றிக் கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்தப்படல் வேண்டும்.
- ஆசிரியர்களும் மாணவர்களும் வகுப்பறைக்குள் நுழையுமுன்னர் கைகளைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். (Sanitize)

## கழிப்பறைகள்

- 1% (விழுக்காடு) சோடியம் ஹைபோக் குளோரைடு கரைசல் போன்றவை பயன்படுத்தி தேசிய நெறிமுறைப்படி (national guidelines) கழிப்பறைகள் கழுவிவிடப்படல் வேண்டும். (MOHFW 2021)
- மாணவர்கள், கழிப்பறைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ கூட்டமாகக் கூடுவதை அனுமதிக்கக் கூடாது.
- ஒப்பனை அறையில் (wash room) பயன்படுத்திய கைகளால் தங்களுடைய கண்கள், மூக்கு அல்லது வாயினைத் தொடக்கூடாது என்று மாணவர்கள் அறிவுறுத்தப்படவேண்டும்.
- மாணவர்கள் ஒவ்வொரு முறை கழிப்பறையைப் பயன்படுத்திய பின்னர், தங்கள் கைகளை சோப்பு மற்றும் தண்ணீரால் கைகளைக் கழுவிக்கொள்ளவேண்டும்.
- பள்ளியில் உள்ள குடிநீர் வசதி உள்ள இடங்களில் கூட்டம் சேராமல் பார்த்துக் கொள்வதற்காக 'க்யூ' வரிசைப் பாதுகாவலர்களை நியமிக்கவேண்டும்.

## விளையாட்டுத் திடல்

- மல்யுத்தம், கபடி, கூடைப்பந்து போன்ற உடல்பட்டுத் தொட்டு விளையாடும் விளையாட்டுகளின் போது ஒருவருக்கொருவர் அருகில் இருப்பதுடன் அடுத்தவரின் சுவாசத்தால் ஏற்படும் சுரப்ப திரவங்களையும் இவர்களும் கையாள நேருவதால், இவ்வகையான விளையாட்டுகள் கோவிட் வருவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கின்றன என்பதால் இவ்வகை விளையாட்டுகள் விளையாடுவதைத் தவிர்க்கவேண்டும்.
- உடற்பயிற்சிகள் (drill exercises) மற்றும் டென்னிஸ், பேஸ்பால், சாப்ட்பால், கால்பந்து போன்ற அணிகளாய்ச் சேர்ந்து விளையாடும் விளையாட்டுகளில், விளையாட்டு வீரர்கள் தள்ளி இருப்பதற்கு வாய்ப்பு இருப்பதாலும், திறந்த வெளிகளில் விளையாடுவதால் சிறந்த காற்றோட்டம் இருப்பதாலும், இவ்விளையாட்டுகளில் கோவிட் ஏற்படுவதற்கான வாய்ப்பு (முன்னர் கூறிய விளையாட்டுகளைவிட) குறைவு ஆகும். யோகா வகுப்புகள் அனுமதிக்கப்படலாம். முடிந்தால் இதை வெளியில் அனுமதிக்கலாம்.

## விளையாட்டுத் திடல்

(தொடர்ச்சி)

- ஒவ்வொரு முறை விளையாட்டு வகுப்புத் தொடங்குவதற்கு முன்னர், பயன்படுத்தக் கூடிய விளையாட்டுப் பொருள்கள் சுத்தப்படுத்தப்படவேண்டும். (Sanitization)
- ஒவ்வொருவகை வகுப்புக்கும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் மாணவர்களைக் கூட்டிச் செல்லும் பொழுது இருவர்க்கிடையே இடைவெளி இருக்குமாறு அழைத்துச் செல்லவேண்டும். வகுப்புத் தலைவனும் இதற்கு உதவி செய்யலாம்.
- விளையாட்டுக் கருவிகளை மாணவர்கள் அடுத்தவருடன் பங்கிட்டுக் கொள்வதற்கு அனுமதிக்கக் கூடாது.
- குழுவாகச் செய்யக்கூடிய workout-கள் பயிற்சிகள் ஆகியவை செய்யும் பொழுது குழுவை குறைந்த மாணவர்கள் கொண்ட சின்னக் குழுவாகப் பிரித்துக் கொள்ளவேண்டும்.
- அரசின் நிபந்தனைகளுக்கேற்ப நீச்சல் குளங்களைத் திறந்து வைக்கலாம்.
- கூட்டமாகக் கூடிச் செய்யும் செயல்கள் அணியாய் ஆடும் விளையாட்டுகள், தேசிய மாணவர் படை, (NCC), சாரணர் மற்றும் வழிகாட்டிகள், (Scouts and Guides) கலாச்சார நிகழ்வுகள் மற்றும் அறிவியல் அரங்கங்கள் ஆகியவை செயல்படுவதைத் தவிர்க்கச் செய்ய வேண்டும்.

## உணவகம்

- உணவு வழங்குபவர்கள், தலை முடி உறை, (head cover) முகத்திரை, மற்றும் கையுறை ஆகியவை அணிந்திருக்க வேண்டும்.
- மாணவர்கள் சிறந்த தூய்மைப் பழக்கங்களைக் கையாள்வதுடன், உணவகத்தில் உள்ள அழுக்கான (Soiled) இடங்களைத் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.
- தட்டுகள், சமையல் பாத்திரங்கள் அல்லது கைத் துண்டுகள் (napkins) ஆகியவற்றைத் தொட்ட கைகளால் தங்கள் முகத்தைத் தடவுவதைத் தவிர்க்க வேண்டும்.
- தனி மனித சமூக இடைவெளி விடுதல் கட்டாயம் காப்பாற்றப்படல் வேண்டும்.
- பயன்படுத்தப்பட்ட தாளால் ஆன துண்டுகளை, மூடி வைக்கும் குப்பைக் கூடையில் போட வேண்டும்.
- வகுப்பறையிலேயே உணவு வழங்குவதற்கு முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும்.
- நோய்த் தடுப்புச் சக்தியினை அதிகரிக்கக் கூடிய உணவுப் பொருட்களை உணவகம் தயாரிக்க வேண்டும்.

## ஆய்வகங்கள்

- ஒவ்வொரு வகுப்பு முடிந்த பின்னரும் ஆய்வக மேசைகள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை, ஆய்வக உதவியாளர்கள் தூய்மைப்படுத்தி (Sanitize) வைக்கவேண்டும்.
- அனைத்து ஆசிரியர்கள், ஆய்வக உதவியாளர் மற்றும் மாணவர்கள் ஆகிய அனைவரும் ஒற்றை முறைப் பயன்படும் (disposable) கையுறைகளையும் மேலங்கி (aprons) களையும் அணிந்து கொள்ளவேண்டும்.
- ஒவ்வொரு மேசைக்கும் இரண்டு மாணவர்கள் மட்டுமே ஒதுக்கப்படல் வேண்டும். அத்துடன் மற்ற மேசைகளில் உள்ளவர்களிடத்தில் இருந்து 5 முதல் 6 அடி வரை இடைவெளி இருக்குமாறு போடவேண்டும்.

## பள்ளிகளில் மதிய உணவு உட்பட்ட உணவு உண்பது

- முடிந்தவரை வீட்டிலிருந்து உணவும் குடிநீரும் கொண்டு வருவதுடன், அடுத்தவருடன் அவற்றைப் பங்கிட்டுக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களுடைய வகுப்பறையிலேயே மதிய உணவை யாருடைய கண்காணிப்பிலாவது உண்ணவேண்டும். ஆசிரியரின் அனுமதி இன்றி எந்த மாணவனும் வகுப்பினை விட்டு வெளியே செல்லக் கூடாது.
- எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் மதிய உணவுத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படவேண்டும்.
- உணவுப் பொருட்களைப் பங்கிட்டுக் கொள்வதை அனுமதிக்கக் கூடாது.

## பொதுவிடங்கள்

- தாழ்வாரங்களில் சென்று வருவதைக் கட்டுப்படுத்தவேண்டும்.
- அந்தப் பகுதி தளத்தின் மேற்பார்வைக்கு (floor duties) ஆசிரியர்கள் போடப்படல் வேண்டும்.
- அடுத்த வகுப்பு / ஆய்வகம் / விளையாட்டுத் திடல் ஆகியவற்றிற்குச் செல்லும் பொழுது வரிசையாகவும், தனி மனித சமூக இடைவெளி விட்டும் செல்லவேண்டும்.
- கூட்டம் கூடுவதை தவிர்க்கும்படியான வகையில், வகுப்பு நடக்கும் கால அட்டவணையைத் திருத்தி அமைக்க வேண்டும்.

## நூலகம்

- மேல் வகுப்பு மாணவர்கள் நூலகத்திற்குச் செல்லலாம்.
- கிருமிநாசினி (sanitiser) வழங்கும் (dispensers) கருவி வசதி நூலகத்தின் நுழைவாயிலில் அமைத்திருக்க வேண்டும்.
- நூலகத்தின் அனைத்து மேசைகளிலும் கிருமிநாசினிகள் வைத்திருக்கவேண்டும்.
- நூலகத்திலிருந்து நூல்கள் எடுத்துச் செல்வதையும் திருப்பிக் கொண்டுவந்து வைக்கும் பழக்கத்தையும் நிறுத்திவிடவேண்டும். குழந்தைகள் வேண்டுமானால் நூலகத்திற்குள்ளேயே நூல்களைப் படிக்கலாம்.

## போக்குவரத்து வசதி

- போக்குவரத்து வண்டிகள் பள்ளி வளாகத்திற்குள் செல்லும் வழி, அதிலிருந்து வெளியேறும் வழி ஆகியவை தெளிவாகக் குறிக்கப்பட்டு அதன்படி போக்குவரத்துக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.
- தங்களுடைய குழந்தைகளைச் சொந்த வாகனத்தில் கொண்டு வந்து விடுவதற்கு பெற்றோர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.
- பள்ளி வளாகத்திற்குள் மற்ற தனியார் வாகனங்கள் சென்றுவர அனுமதிக்கக் கூடாது.
- பள்ளி வாகனத்தைப் பயன்படுத்தும் மாணவர்கள் உள்ளே உட்காருவது மற்றும் வாகனத்திலிருந்து இறங்கி வருவதற்கான நெறிமுறைகளையும் பின்பற்றவேண்டும்.
- மாணவர்கள் பேருந்துகளில் தனக்கென்ற ஒதுக்கப்பட்ட இருக்கையில்தான் உட்காரவேண்டும். ஒருவருக்கொருவர் இருக்கையை மாற்றிக் கொள்வதும் கூடாது.
- இருமல் வரும்பொழுது செய்ய வேண்டிய முறை, (cough etiquette) கைத் தூய்மை, சமூக இடைவெளி விட்டு விலகி இருத்தல் ஆகிய பழக்கங்களை பள்ளி வாகனங்களில் வருபவர்கள் மேற்கொள்ள வேண்டும். பள்ளி வாகனத்திலோ அல்லது பொதுத்துறை வாகனத்திலோ பள்ளிக்கு வந்து சென்று கொண்டிருக்கும் பொழுது, உரக்கப் பேசுவதும், வாகனத்திற்கு உள்ளேயே உண்பதும் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- வாகனத்தை நிறுத்தி வைக்கும் இடங்களில் சொந்த வாகனங்களில் வரும் பணியாளர் மற்றும் மாணவர்கள் கூட்டமாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- பேருந்து வந்து நிற்கும் இடத்திலும் வாகனங்கள் நிறுத்திவைக்கும் இடத்திலும் கண்காணிப்பதற்கு பள்ளிப் பணியாளர் மற்றும் காவலர்களை அதிகமாகப் பணியில் ஈடுபடுத்த வேண்டும்.
- பள்ளிப் பேருந்து ஓட்டுநருக்கும் பயணம் பண்ணுபவர்கட்கும் இடையில் தடுப்புகள் செய்திருக்க வேண்டும். பேருந்தில் கிருமிநாசினி கிடைக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பேருந்தினை எவ்வாறு கழுவி கிருமி நீக்கம் செய்வது என்பது பற்றி ஓட்டுநருக்கு சரியான பயிற்சி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

# தொடர்புடைய சம்பந்தப்பட்டவர்களுக்கான (Stake Holders) நெறிமுறைகள்



இந்த நோய் பரவுதலைக் கட்டுப்படுத்துவதில் நாம் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. பள்ளி நடத்துவதில் தொடர்பு உடைய ஒவ்வொருவரும் கோவிட் தொற்று அலை மேலும் ஏற்படுவதைத் தடுப்பதில் விடாமுயற்சியுடன் நடந்து கொள்ளவேண்டும். குடும்பத்தில் உள்ள எவருக்கேனும் அல்லது தன்னுடன் நெருக்கமாக இருக்கும் யாருக்காவது கோவிட் 19 தொற்று இருக்கலாம் என்று ஐயம் எழுந்தால் அந்தச் செய்தியைப் பள்ளி நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். அதனுடன் இந்திய அரசு வழங்கியிருக்கும் வழிகாட்டுதல்படி உரிய நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

கோவிட் தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை அவ்வப்போது குறிப்பிடக்கூடிய புதிய நெறிமுறைகளையும், (protocols) நிபந்தனைகளையும் (norms) பள்ளியில் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

### பெற்றோர்

- (அவர்கள்) முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு ஊக்கப்படுத்தல்பட வேண்டும்.
- தங்களுடைய குழந்தைகளுக்கு தூய்மைப் பழக்க வழக்கங்கள் பற்றி எடுத்துக் கூறி அதைப் பின்பற்றச் செய்ய வேண்டும்.
- தன்னுடைய குழந்தைகளின் சீருடைகள் மற்றும் பொருள்களை சுத்தப்படுத்துவதுடன் ப்ளீச் பண்ணக் கூடிய டிடர்ஜெண்ட் பவுடர் / திரவம் / சோப்பு போட்டு, துணிகளை உதறாமல், அதிக வெப்பத்தில் வைத்து கிருமி போக்க வேண்டும். (Sanitise)
- வீட்டில் உள்ள யாருக்காவது அல்லது குழந்தை தொடர்பிலிருந்த யாருக்காவது கோவிட் 19 வந்துள்ளது என்று ஐயம் இருந்தால், குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பக் கூடாது.
- தங்களுடைய குழந்தைகளின் உடல்நலத்தைக் கவனித்துக் கொண்டே (monitor) இருக்கவேண்டும்.
- பள்ளி வளாகத்திற்குச் சென்றால் அங்குள்ள வழிகாட்டுதல்களைப் (guidelines) பின்பற்றவேண்டும்.
- பெற்றோர் ஆசிரியர் கூட்டம் இருந்தால் அதை மெய்நிகர் (virtual) வழியாகவோ அல்லது சிறு குழுவாகவோ கலந்து கொள்ளவேண்டும்.

## மாணவர்கள்

- பள்ளி வளாகத்தில் இருக்கும்பொழுது எப்பொழுதும் முகத்திரை அணிந்து கொண்டிருக்க வேண்டும்.
- மற்ற மாணவர்களிடமிருந்து தூரமாக விலகி இருத்தல் (physical distance) வேண்டும்.
- அடிக்கடி கைகளைக் கழுவுவதோ அல்லது கைக்குக் கிருமிநாசினி போட்டுக் கொள்வதோ செய்து கொண்டிருக்கவேண்டும்.
- மற்றவர்களுடன் சேர்ந்து உண்பதிலிருந்தும் உணவைப் பங்கிட்டுக் கொள்வதிலிருந்தும் ஒதுங்கி இருக்கவேண்டும்.
- பள்ளியிலிருந்து வந்தவுடன் உடனே குளிக்கவோ / நீரில் நனைந்து கழுவவோ (Shower) கூறப்படல் வேண்டும்.
- தனக்கு வேண்டிய குடிநீரை பள்ளிக்கு எடுத்துச் செல்லவேண்டும்.
- மற்ற பிள்ளைகளுக்கு உடல் நலமில்லை என்று தெரிந்தாலோ அதை ஆசிரியரிடம் சொல்லிவிடவேண்டும்.

## பள்ளி நிர்வாகிகள்

- குறிப்பிட்ட நேரங்களில் பள்ளி வளாகத்தில் கிருமி நீக்குவதற்கான நிலையான செயல் முறை (standard operating procedure) எழுதி வைக்க வேண்டும்.
- ஒரு மாணவன் உடல் நலம் குன்றியிருந்தால் அப்போது என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்பதற்கான ஒரு திட்டம் தயாரிக்கவேண்டும்.
- பள்ளி இருக்கும் பகுதியிலுள்ள உள்ளாட்சி சுகாதார அலுவலர்களுடன் தொடர்பில் இருந்து கொண்டு அவ்வப்போது உள்ள கோவிட் நிலைமையைத் தெரிந்து கொண்டும், அவற்றிற்கான நெறிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ளவும் வேண்டும்.
- பள்ளிப் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அவ்வப்போது கோவிட் விழிப்புணர்வு வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்படவேண்டும்.
- மாணவன் பள்ளிக்குச் சரியாக வருகின்றானா என்பதைக் கவனித்து வருவதுடன் அப்படி நீண்ட நாட்களாக வரவில்லை யெனில் அதற்கான காரணம் இருப்பின், அது என்ன என்று அறிய வேண்டும்.
- பெற்றோரிடம் சரிபார்ப்புப் பட்டியலைக் (check list) கொடுத்து, பள்ளியில் ஒருவருக்கொருவர் தொற்று ஏற்படுத்துதலைத் (cross contamination) தவிர்ப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் சரியாக இருக்கின்றன என்பதை உறுதி செய்து காட்டவேண்டும். (இணைப்புகளைப் பார்க்கவும்)
